கூட்டுறவு மத்திய வங்கிகள் வழங்கிய கடன்கள்

* 582. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1969-70-ல் கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலம் தமிழ் நாட்டில் விவசாய அபிவிருத்திக்கு மட்டும் அளிக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ?

(இ) அதில் வசூலாகாமலிருக்கும் கடன் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ரூபாய் நாற்பத்திரண்டு கோடியே எழுபத்தி ஆறு லட்சத்து எழுபது ஆயிரம்.

(இ) ரூபாய் மூன்று கோடியே ஒரு லட்சத்து இருபத்து ஏழாயிரம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இப்போது வறட்சி நிலைமை ஏற்பட்டு தற்போதுதான் மழை பெய்திருக்கிறது. ஆகவே, தற்போது வசூலிக்கப்பட்டிருக்கிற கடன் தொகையை 6 மாதம் தள்ளிவைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வசூலிக்கப்பட்டிருக்கிற கடன் தொகையைத் தள்ளி வைக்க வேண்டியதில்லை. வசூலிக்கப்படாமல் இருக்கிறகடன் தொகையைத் தள்ளிவைக்க வேண்டுமானால், நான் பல முறை குறிப்பிட்டிருக்கிற வழிமுறையைக் கைப்பற்றினால்போதும்.

திரு. ரா. ரா. முனுசாமி : 1971-72-இல் பருவ மழை பொய்த்து விட்ட காரணத்தினால் செஞ்சி வட்டத்தில் சம்பா மணிலாப் பயிர் வீணாகிவிட்டது, ஆகவே அந்தப் பகுதியில் கடன் வசூலை ஓராண்டு தள்ளி வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதைப்பற்றி பலமுறை மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். ஓராண்டு அல்ல, 3 ஆண்டுகள் தள்ளிவைக்கப்படும். அதற்கு முறைப்படி மனு வரவேண்டும். ரெவின்யூ அதிகாரிகளிடம் இருந்து 6 அணாவுக்குக் குறைவாகத்தான் விளைச்சல் ஏற்பட்டது என்பதாக அணாவாரி சர்டிபிகேட் வாங்கி அனுப்பினால் போதும், கடன் வசூல் தள்ளி வைக்கப்படும்.

Production of grain

* 583 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether there was a record production of grain for the year 1970-71 in the State ; and

(*b*) if so, the details thereof?

1971 டிசம்பர் 18]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) 1970-71-ம் ஆண்டில் உணவு தானியங்களின் உற்பத்தியின் அளவு 70·30 லட்சம் டன்களாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் விபரம் வருமாறு :

	உற்பத்தி லட்சம் டன்கள்
(1) அரிசி	53.03
(2) சிறுதானியங்கள்	16.03
(3) பயறு வகைகள்	1.24
	70.30

Small Land Owners Association at Thungapuram

* 584 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether the Hon. the Chief Minister has received a petition, dated nil from the சிறு நில விவசாயச் சங்கத் தலைவர் Thungapuram, Perambalur taluk; and

(b) if so, the details thereof and the action taken tnereon?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை, ஐயா. விசாரணை செய்ததில் சிறு நில விவசாயிகள் சங்கம் என்ற பெயரில் துங்கபுரத்தில் ஒரு சங்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Dr. H. V. HANDE: Is it a fact that some request was sent up from the taluk of Perambalur requesting the Government to give some rebate with regard to the various loans that they were having, because the particular areas in Perambalur taluk were declared as drought acected? If so, will this Government consider the request of the persons who met the Government or sent petitions or written to the Government and see that the arrears of payments are all postponed for another one or two years of at least part of it is postponed?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, துங்கபுரம் சிறு நில விவசாய சங்கத் தலைவரிடம் இருந்து இங்கே குறிப்பிட்டது போல மனு ஒன்றும் வேளாண்மைத் துறைக்கு வரவில்லை. வருவாய்த் துறை, மற்றும் கூட்டுறவுத் துறைக்கும் குறிப்பிட்ட மனு வரவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். சிறு நில விவசாயச் சங்கம் என்ற பெயரால் துங்கபுரத்தில் ஒரு சங்கமும் இல்லை என்று பெரம்பலூர் வட்டாட்சியர் அறிவிப்பதாக திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிறார்.